DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 193/2018**

Deposition of :PW - 9

| | | |
|---|---|---|
| Name | : டாக்டர். ஆர். சங்கீதா | Caste: |
| Father's Name: | திரு. ரங்கநாதன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 19th day of April - 2023.

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.06.2017 அன்று நான் சேலம் அரசு மருத்துவமனையில் உதவி பேராசியராக பணிபுரிந்த போது வாழப்பாடி காவல் நிலைய குற்ற எண்.315/2017 என்ற வழக்கில் இறந்து போன சுமார் 44 வயது மதிக்கத்தக்க முருகேசன் என்னும் ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வாழப்பாடி காவல் நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் பெற்று, த.கா. திரு. சின்னையன் என்பவரால் அடையாளம் காட்டப்பட்ட மேற்படி பிரேதத்தின் மீது பிற்பகல் 1.30 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன்.

பிரேதமானது சுமாரான உடல்வாகு கொண்டதாக காணப்பட்டது. மரண விரைப்பு தன்மையானது பிரேதத்தின் உடல் முழுவதும் காணப்பட்டது. கைவிரல் நகங்கள் அனைத்தும் நீலம் பூத்து காணப்பட்டது. பிரேதத்தின் மீது காணப்பட்ட வெளிப்புற

காயங்கள் பின்வருமாறு :

1. கிடைமட்டமாகவும், முழுமையாகவும் காணப்பட்ட சிவப்பு நிற கழுத்தை இறுக்கிய சிராயப்பு காயம் கழுத்தின் முன்பகுதி, பக்கவாட்டு பகுதி மற்றும் பின்பகுதியில் 33 செ.மீ. நீளத்திலும், 5 செ.மீ. அகலத்திலும், கழுத்துக் குழியில் இருந்து 5 செ.மீ. மேலாகவும், நடுத்தாடையில் இருந்து 5 செ.மீ. கீழாகவும், வலது காது பகுதியில் இருந்து 6 செ.மீ. கீழாகவும், இடது காது பகுதியில் இருந்து 6 செ.மீ. கீழாகவும் காணப்பட்டது.

கழுத்துப்பகுதியை கூரிட்டு பார்த்தபோது இடதுபக்க தசை மற்றும் நடுப்பகுதியில் 6X 6 X 0.5 செ.மீ. அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. வலதுபக்க கழுத்தின் தசை பகுதியில் 5 X 4 X 0.5 செ.மீ. அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. தைராய்டு எலும்பு மற்றும் நாவடி எலும்பு முறிந்து காணப்பட்டது. அதைச்சுற்றியுள்ள தசைப்பகுதி கன்றி காணப்பட்டது. தலை தோலின் உட்புறமாக வலதுபக்கம் பக்கவாட்டு மற்றும் பின்பகுதியில் 8 X 7 X 0.5 செ.மீ. அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. மூளை சவ்வு, மண்டை ஓடு, மூளை, மண்டை ஓட்டின் அடிப்பகுதி ஆகியவை சாதாரணமாக காணப்பட்டது.

விலா எலும்புகள் மற்றும் இருதயம் ஆகியவை சாதாரணமாக காணப்பட்டது. நுரையீரல்கள் சாதாரண அளவில் இருந்தது. மேலும் இரத்தப் புள்ளிகள் 2 நுரையீரல்களிலும் காணப்பட்டது.

இரைப்பையில் 100 ml அளவு உள்ள பழுப்பு நிற திரவம் காணப்பட்டது. கல்லீரல் , மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் ஆகியவை சாதாரண அளவில் சாதாரணமாக காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது. இடுப்பு எலும்பு மற்றும் தண்டுவடம் ஆகியவை சாதாரணமாக காணப்பட்டது.

பிரேதத்தில் இருந்து உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து இரசாயன பரிசோதனைக்காக சேலம் வட்டார தடயவியல் கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இறப்பானது பிரேத பரிசோதனையிலிருந்து 24 மணி நேரத்திற்கு முன்பாக நேர்ந்திருக்கக்கூடும்.

சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட இரசாயன பரிசோதனை அறிக்கையில் இறந்துபோன நபரின் இரைப்பை, குடல், கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள், இரத்தம் ஆகியவற்றில் ஈத்தைல் ஆல்கஹால் கண்டறியப்பட்டதாகவும், வேறு நச்சுப்பொருட்கள் எதுவும் கண்டறியப்படவில்லை என்றும் சொல்லப்பட்டிருந்தது. அந்த இரசாயண பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.–7.** என்னால் வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8.**

இரசாயன பரிசோதனை அறிக்கை பெற்றதற்கு பிறகு எனது இறுதி கருத்தாக மேற்கண்ட இறந்துபோன நபர் அவரது கழுத்து இறுக்கப்பட்டதனால் ஏற்பட்ட மூச்சுதிணறலின் விளைவுகளினால் இறந்திருக்க கூடும் என்றும், மேலும அவர் ஈத்தைல் ஆல்கஹால் அருந்திய அறிகுறிகளுடன் காணப்பட்டார் என்றும் கருத்து வழங்கினேன். என்னால் வழங்கப்பட்ட இறுதி கருத்துறு **அ.சா.ஆ.9**. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அவர் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய தயாராக இல்லை. வழக்கு விசாரணையை வேறு தேதிக்கு ஒத்திவைக்கக்கோரி அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது. குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.